வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி-5.10.2025 நேரம்- மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மாநிலங்களவை தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வரும் செவ்வாய்கிழமை அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆரோக்கியமான சமுதாயமே வளர்ந்து வரும் நாட்டிற்கு அடிப்படை என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில், கடந்த 6 ஆண்டுகளில் 17 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது என்று மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

7 வயது முதல், 15 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஆதார் பயோமெட்ரிக் திருத்தப் பணிகள் மேற்கொள்ள கட்டணம் ரத்து செய்யப் பட்டுள்ளது.

*குடியரசு துணைத தலைவர்* (11)

குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவை தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன் வரும் செவ்வாய்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில் மாலை 4 மணியளவில் நடைபெற உள்ள அனைத்து கட்சி தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார். நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தொடங்க உள்ள நிலையில், அனைத்து கட்சிகளின் ஒத்துழைப்பை கோரும் வகையில், இக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. அவை முன்னவரும், பாஜக தேசிய தலைவருமான திரு ஜே பி

நட்டா, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, எதிர்கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மத்திய இணையமைச்சர்கள் டாக்டர் எல் முருகன், மற்றும் அர்ஜுன் ராம் மெக்வால் உள்ளிட்டோர் அழைக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்கள்.

*இங்கிலாந்து பிரதமர்* (9)

பிரதமர் திரு நரேந்திரமோடியின் அழைப்பின் பேரில் இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் வரும் 8 ஆம் தேதி 2 நாள் பயணமாக இந்தியா வருகிறார். பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் அவர் முக்கிய பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். 2035 தொலைநோக்கு செயல் திட்டத்தின் அடிப்படையில் வர்த்தகம் மற்றும் முதலீடு, சுகாதாரம், எரிசக்தி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் உள்ளிட்ட துறைகள் குறித்த பேச்சுவார்த்தைகள் இரு தலைவர்கள் இடையே நடைபெற உள்ளது. பின்னர், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு உள்ளிட்ட தலைவர்களையும், இந்திய தொழிலதிபர்களையும் இங்கிலாந்து பிரதமர் சந்திக்க உள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ்* (8)

இந்தியாவில் தயாரிப்போம் மற்றும் இந்தியாவில் வடிவமைப்போம் உள்ளிட்ட திட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் புவனேஷ்வர் ஐஐடி யில் 4 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பில் நமோ செமி கண்டக்டர் ஆய்வகம் அமைக்க மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை திரு அஸ்வினி வைஷ்ணவ் ஒப்புதல் அளித்துள்ளார். தற்போது நாடு முழுவதும் அதிகரித்து வரும் சிப் எனப்படும் நுண்தகடு உற்பத்திக்கு இந்த ஆய்வகங்கள் பயனளிக்கும் என்றும், திறன்மிகு இளைஞர்களை தொழில்துறைக்கு தயார்படுத்த முடியும் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

*மன்சுக் மாண்டவியா 1* (6)

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கடந்த டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி தொடங்கி வைத்த பிட் இண்டியா- சண்டேஸ் ஆன் சைக்கிள் இயக்கம் ஒரு நாடு தழுவிய இயக்கமாக மாறி மக்கள் இடையே, உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக இன்றைய பிட் இண்டியா சைக்கிள் பேரணி குறித்த ஒருசெய்தித் தொகுப்பு…….

**(வாய்ஸ்)**

*மன்சுக் மாண்டவியா 2* (19) **(வாய்ஸ்)**

இன்று புதுடெல்லியில் மேஜர் தியான்சந்த் மைதானத்தில் இருந்து இண்டியா கேட் வரையிலும் நடைபெற்ற பிட் இண்டியா சைக்கிள் பேரணியில் மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுது துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்ற மக்கள் அனைவரும் ஆரோக்கியமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். சைக்கிள் ஓட்டுவதால், உடல் தகுதி பெறுகிறது என்றும், இதனால் சமுதாயம் ஆரோக்கியமாக மாறும் என்றும் தெரிவித்தார். ஆரோக்கியமான சமுதாயமே வளர்ந்து வரும் நாட்டிற்கு அடிப்படை என்றும் அவர் குறிப்பிட்டார். உலக ஆசிரியர் தினமான இன்று இந்த சைக்கிள் பயணத்தில், ஆசிரியர்களும், மாணவர்களும் பெருமளவு பங்கேற்றது பாராட்டுதலுக்கு உரியது என்று திரு மாண்டவியா தெரிவித்தார். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உத்வேகம் அளிப்பவர்களாக திகழ்கின்றனர் என்றும், சைக்கிள் ஓட்டுவதற்கு, சமநிலையை பராமரிப்பது எந்த அளவு அவசியமோ, அதே போன்று வாழ்க்கையிலும் சமநிலையை கடைபிடித்தால் முன்னேறி செல்ல முடியும் என்றும் அவர் கூறினார். ஞாயிறுதோறும் சைக்கிள் பயணம் மாபெரும் இயக்கமாக உருவெடுத்திருப்பதாக கூறிய அமைச்சர், இன்றைய தினம்

நாடு முழுவதும் 10 ஆயிரத்து 50 இடங்களில் இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

*வேலை வாய்ப்பு அமைச்சகம்* (13)

இந்தியாவில், கடந்த 6 ஆண்டுகளில் 17 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது என்று மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த வேலை வாய்ப்புகள் மூலம் 2017-18 ஆம் ஆண்டில் 6 சதவிகிதமாக இருந்த வேலை இல்லா திண்டாட்டம், 2023-24 ஆம் ஆண்டில் 3.2 சதவிகிதமாக குறைந்துள்ளது. இளைஞர்கள் வேலையில்லா திண்டாட்டமும் 17.8 சதவிகிதத்தில் இருந்து 10.2 சதவிகிதமாக குறைந்துள்ளது என்றும் அமைச்சகம் சுட்டிக்காட்டி உள்ளது. ஸ்டார்ட் அப் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாக சுயதொழில் புரிவோரின் விகிதம் 58.4 ஆக அதிகரித்துள்ளது. மேலும், புதிதாக வேலை வாய்ப்பு பெறுவோரில் மகளிர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், கடந்த 7 ஆண்டுகளில் 1 கோடியே, 56 லட்சம் பெண்கள் முறையான தொழில் துறையில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

*ஆதார் (13)*

7 வயது முதல், 15 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஆதார் பயோமெட்ரிக் திருத்தப் பணிகள் மேற்கொள்ள கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக இந்திய தனித்துவ அடையாள ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த முடிவு நாடு முழுவதும் உள்ள 6 கோடி குழந்தைகளுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப படுகிறது. இந்த கட்டண ரத்து நடவடிக்கை இம்மாதம் முதல் தேதியில் இருந்து ஏற்கனவே நடைமுறைக்கு வந்துள்ளது என்றும், ஓராண்டு காலத்திற்கு இது செயல்பாட்டில் இருக்கும் என்றும் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது. 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஆதார் பதிவு செய்ய பெயர், புகைப்படம், பிறந்த தேதி, பாலினம்,முகவரி ஆகிய விவரங்கள் இருந்தால் மட்டும் போதும், அவர்களுக்கு கைவிரல் ரேகைகள், கண் விழி ஸ்கேன் ஆகியவை செய்யப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

*ஜிஎஸ்டி- 1 கைவினை பொருட்கள் (9)*

சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களும் பயன் பெறும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழா, கடந்த மாதம் 22 ஆம் தேதி முதல், நாடெங்கிலும் அமலாகி வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பை எளிமைப்படுத்துவதில் முக்கிய நடவடிக்கையாக திகழ்கின்றன. இந்த சீர்திருத்தங்களின் கீழ், பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் மீது அறிவிக்கப்பட்டுள்ள வரிக் குறைப்பினால் மக்களுக்கு கணிசமான ஆறுதல் கிடைத்துள்ளது. அந்த வகையில் கைவினை பொருட்கள் மீதான வரி குறைப்பு குறித்த விவரங்கள்.........

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி- 2 கைவினை பொருட்கள் (17)*

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் கைவினைஞர்கள், விவசாயிகள், மற்றும், சிறு வணிகர்களுக்கு குறிப்பிடத்தக்க நிவாரணத்தை அளித்துள்ளன. திருத்தப்பட்ட ஜிஎஸ்டி விகிதங்களின் கீழ், கையால் நெய்யப்பட்ட சால்வைகள், பாரம்பரிய கைவினை பொருட்கள், மற்றும் பிராந்திய தயாரிப்புகளுக்கு விதிக்கப்பட்ட 12 சதவிகித ஜிஎஸ்டி வரி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதேபோல், பாரம்பரிய தோல் செருப்புகள், மர கைவினை பொருட்கள், மண்பாண்டம் மற்றும் உலோக பொருட்கள் உள்ளிட்டவை 5 சதவிகித ஜிடிஸ்டி வரம்பில் கொண்டு வரப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட ஜிடிஸ்டி விகிதங்களுடன் இந்த சீர்திருத்தங்கள், சிறு கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளன. பண்டிகை காலத்திலும், அதற்கு பிறகும், விற்பனை, வேலை பாதுகாப்பு மற்றும் கிராமப் பொருளாதாரங்களுக்கு ஊக்கம் அளிப்பதில் கவனம் செலுத்தப்படும் அதே நேரத்தில், விவசாயிகள் மற்றும் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு புதிய வாய்ப்புகளையும் உருவாக்குகின்றன. வரிக் குறைப்புகள் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தவும், செழிப்பான சந்தை மற்றும் சமூகங்கள் உருவாகவும் வழி வகை செய்கின்றன.

*இருமல் மருந்து* (11)

மத்திய பிரதேசத்தில் இருமல் மருந்து அருந்திய குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, அந்த மருந்தை பரிந்துரை செய்த மருத்துவர் கைது செய்யப்பட்டுள்ளார். மத்திய அரசின் வேண்டுகோளின் படி, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகம் இருமல் மருந்தின் மாதிரிகளை சோதித்ததில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமான டை எதிலின் கிளைக்கால் இருப்பது உறுதியாகி உள்ளது. சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு குழந்தைகள் இறந்ததாகவும், தமிழகத்தின்

காஞ்சிபுரத்தில் தயாரிக்கப்படும் கோல்ட்ரிஃப் எனப்படும் இந்த மருந்து தடை செய்யப்பட்டுள்ளதாகவும், 2 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சளி, இருமல் மருந்துகளை பரிந்துரைக்க கூடாது என்று மத்திய சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது.

*டார்ஜிலிங்* (10)

மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டத்தில் தொடர் கனமழை காரணமாக இரும்பு பாலம் ஒன்று அடித்து செல்லப்பட்டதில் பலர் உயிரிழந்தனர். இந்த விபத்து குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்டோர் துயரம் வெளியிட்டுள்ளனர். அம்மாநிலத்திற்கு தேவையான உதவிகளை மத்திய அரசு செய்ய தயாராக இருப்பதாக பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். மீட்பு படையினர் அங்கு விரைந்துள்ளதாகவும், மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

*கிரிக்கெட்* (8)

கொழும்பு பிரேமதாசா விளையாட்டு அரங்கில் இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் மகளிர் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி தொடரின் இன்றைய ஆட்டத்தில் இந்தியா சற்று முன் வரை, ------------ ஓவரில், ------- விக்கெட் இழப்பிற்கு, -------- ரன் எடுத்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக இதுவரை நடந்த 11 போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. 2022 ஆம் ஆண்டு கடைசியாக நடைபெற்ற உலக கோப்பை போட்டியில் 107 ரன் வித்தியாசத்தில் இந்தியா ஆபார வெற்றியை பெற்றது குறிப்பிடத் தக்கது.

வானிலை (4)

தென்னிந்திய மற்றும் தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், புதுச்சேரி-காரைக்கால் மற்றும் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.